**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 38 of 2025**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: அருணாதேவி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A2 Present)**

**Dated.02.02.2026**

**முதல் விசாரணை**

நான் கண்ணாக்குடியில் வசித்து வந்து ஸ்டுடியோ வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 26.09.2024ம் தேதி எனது பாட்டி செல்லம்மாளுக்கு உடல்நிலை சரியில்லை என்று தகவல் கேள்விபட்டு பார்ப்பதற்காக நானும், எனது கணவர் சாட்சி அர்ஜூனன் என்பவரும் சென்றிருந்தோம். பிரச்சனை வரும் என்பதால் எங்களது ஊர் துணைத்தலைவர் ஜெகநாதன் என்பவரை அழைத்து சென்றோம். இரவு 11.45 மணியளவில் பாலா என்பவரின் வீட்டிற்கு அருகில் நானும், எனது கணவரும் இருந்தபோது, 1, 2 எதிரிகள் நீ இங்க வரக்கூடாது, நீ தான் நொண்டிபயல கட்டிக்கிட்டு போய்ட்ட கண்டாரவோலி, தேவுடியா இங்க எதுக்குடி வர என்று என்னை பார்த்து அசிங்கமாக திட்டினார்கள். 1ம் எதிரி எனது தலை முடியை பிடித்து அடித்து சேலை கிழித்து பொது இடத்தில் வைத்து மானபங்கபடுத்தினார். 2ம் எதிரி விளக்கமாற்றால் எனது கை, உடம்பு, காது ஆகிய இடங்களில்

அடித்தார். அதில் எனக்கு வலது காதில் கீழ்ப்பகுதி தோடோடு அறுந்து கொண்டு வந்துவிட்டது. 1ம் எதிரி உன்னையும், உனது கணவரையும் கொன்றால் யார் வந்து கேட்பார் என்று மிரட்டினார். எனது பாட்டியை பார்க்கவிடாமல் எதிரிகள் தடுத்துவிட்டனர். அதன்பிறகு எனது பாட்டி இறந்துவிட்டார். பிறகு உயிருக்கு பயந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்காக இலால்குடி அரசு மருத்துவமனையில் சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து போது மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத தெரியும் என்றால் சரிதான். 1ம் எதிரி என்னை மானபங்க படுத்திவிட்டார் என எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் எனது முதல் விசாரணையில் காது அறுந்துவிட்டது என சொல்லியுள்ள விவரத்தை போலீசார் விசாரணையிலும், எனது புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்சொன்ன விவரங்கள் புகாரில் இல்லை என்றால் அது நான் கொடுத்த புகார் இல்லை என்றால் சரிதான். நானும், எனது கணவரும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றாலும், நான் எனது கணவரை காதலித்து திருமணம் செய்து கொண்டேன் என்றாலும் சரிதான். திருமணத்திற்கு பிறகு நான் மணக்காலில் குடியிருந்து வருகிறேன்

என்றால் சரிதான். 2ம் எதிரி எனது உடன் பிறந்தவர் என்றாலும், வளர்மதி என்று மற்றும் ஒரு அக்கா உள்ளார் என்றாலும் சரிதான். நான் காதல் திருமணம் செய்து கொண்டதால் 2ம் எதிரி மற்றும் எனது மற்றொரு அக்கா வளர்மதி ஆகியோர் என்னிடம் பேசுவதில்லை என்றாலும் அவர்களுக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்து வந்தது என்றாலும் சரிதான். 1, 2 எதிரிகள் கண்ணாக்குடியில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஊர் துணைத்தலைவர் ஜெகன் நாதன் என்பவர் வீடு கண்ணாக்குடி பாப்பாத்தி அம்மன் கோவில் தெருவில் உள்ள பிச்சைராமர் வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் பிச்சை ராமர் வீட்டிற்கு பின்னால் 4 வீடுகள் தள்ளி தேன்மொழி என்பவரது வீட்டிற்கு பின்புறம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எனது அக்கா வளர்மதி அங்கு இருந்தார் என்றால் அதுகுறித்து நான் கவனிக்கவில்லை. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சம்பவ இடத்தில் நிறைய பேர் இருந்தார்கள். பாலா என்பவரும், பாலசுப்ரமணியம் என்பவரும் வேறு வேறு நபர்கள் என்றால் சரிதான். பிச்சை ராமர் வீட்டிற்கு கிழக்கே பாலசுப்ரமணியன் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். செல்லம்மாள் வீட்டிற்கு அருகே பாலசுப்ரமணியன் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் பாலா என்பவரின் வீட்டிற்கு அருகே நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ள நிலையில் அவரது அப்பா பெயர் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எப்போது புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் 27.09.2024 அன்று மாலை 04.30 மணிக்கு புகார் வாக்குமூலம் பெற்றார்கள். எந்த போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார் என்றால் ஆண் போலீசார் பெற்றார், பெயர்

தெரியவில்லை. நான் சொல்ல சொல்ல புகார் வாக்குமூலத்தை போலீசார் எழுதிக் கொண்டனர் என்றாலும் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றாலும், என்னுடைய கையொப்பத்திற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களையும், புகார் வாக்குமூலம் பெற்ற உடனேயே அங்கே வைத்து போலீசார் எழுதினர் என்றாலும் சரிதான். என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்ற பிறகு போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் 1ம் எதிரி எனது சேலையை கிழித்துவிட்டார் என சொல்லியுள்ள நிலையில் அவ்வாறு கிழிக்கப்பட்ட சேலையை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. விளக்கமாறு தென்னை ஈர்க்கு, பனைஓலை, நைலான் என்று பல வகைகளில் உள்ளது என்றால் சரிதான். 2ம் எதிரி எந்த வகையான விளக்கமாற்றால் என்னை அடித்தார் என்பது குறித்து எனது புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் தெரு விளக்கு இல்லை என்றால் தெரு விளக்கு இல்லை, இருட்டான இடம் ஆகும். நான் புகாரில் சொல்லியுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியுள்ளது போல் பாலா என்பவரின் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும் சம்பவ நேரத்தில், சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருப்பதால் அவர்கள் மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அக்கா வளர்மதி எனது அம்மாச்சியுடன் இருந்தபோது எனக்கும், அவருக்கும் தகராறு ஏற்பட்டு நான் அவரை அடிக்க முயற்சி செய்யும் போது கீழே விழுந்ததால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.02.02 15:21:36 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 38 of 2025**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: அர்ஜுனன்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(A1, A2 Present)**

**Dated.02.02.2026.**

**முதல் விசாரணை**

நான் கண்ணாக்குடியில் வசித்து வந்து போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 1ம் எதிரி அவரது அக்கா வீட்டுக்காரர் ஆவார். 2ம் எதிரி எனது மனைவியின் அக்கா ஆவார். கடந்த 26.09.2024ம் தேதி எனது மனைவியின் பாட்டிக்கு உடல்நிலை சரியில்லை என்று தகவல் சொன்னார்கள். அதன்பிறகு நான் எனது மனைவியையும், ஊர்துணைத் தலைவர் ஜெகன்நாதன் என்பவரையும் அழைத்துக் கொண்டு எனது மனைவியின் பாட்டியை பார்க்க சென்றேன். இரவு 11.45 மணியளவில் பாட்டியின் வீட்டிற்கு எதிரே உள்ள பாலசுப்ரமணியன் என்பவரது வீட்டிற்கு அருகே நான், அ.சா.1, ஜெகநாதன் ஆகியோர் நின்று கொண்டிருந்தோம். ஜெகநாதன் 1ம் எதிரியிடம் அ.சா.1 அவரது பாட்டியை பார்க்க வந்திருந்ததாக சொன்னார். 1ம் எதிரி அ.சா.1 யை பார்த்து கண்டாரவோலி, தேவுடியா நொண்டி பயக்கூட போய்ட்டு இப்ப

இங்க வந்துருக்கு உனக்கு என்ன மரியாதை என்று அசிங்கமாக பேசினார். 1ம் எதிரி அ.சா.1ன் மயிற்றை பிடித்து அடித்து சேலையை பிடித்து கிழித்தார். 2ம் எதிரி விளக்கமாற்றால் அ.சா.1ன் தலை, உடம்பு ஆகிய இடங்களில் அடித்தார். 2ம் எதிரி வலது காதை பிடித்து இழுத்ததில் அ.சா.1ன் காதானது தோடோடு பிய்ந்துவிட்டது. அதில் அ.சா.1 கீழே விழுந்துவிட்டார். எதிரிகள் இருவரும் எங்களை துரத்த ஆரம்பித்தார்கள். உங்களை கொன்றுபோட்டால் யார் கேட்பார் என்று 1ம் எதிரி எங்களை பார்த்து மிரட்டினார். 1ம் எதிரி என்னை பார்த்து உடல் ஊனத்தை கொச்சைப்படுத்தி நொண்டி பயலே என்று திட்டினார். எதிரிகள் இருவரும் எனது மனைவியை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொச்சைப்படுத்தினார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.1யை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தோம். அ.சா.1 மருத்துவமனையில் இருந்த போது மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக புகார் வாக்குமூலம் கொடுத்தார். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். எனது மனைவி 6 மாத குழந்தைக்கு பால் கொடுத்து கொண்டிருந்தார். அவருக்கு வயிற்றுப் பகுதியில் அறுவை சிகிச்சை செய்திருந்தார்கள். எதிரிகள் இருவரும் மனிதாபிமானம இல்லாமல் உயிர் பயம் ஏற்படும் வகையில் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

நான் போலீசார் விசாரணையில் எதிரிகள் இருவரும் உயிர் பயம் ஏற்படும் வகையில் நடந்து கொண்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் எனது மனைவியை காதல் திருமணம் செய்து கொண்டு மணக்காலில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான்

எனது மனைவியை காதல் திருமணம் செய்து கொண்டதால் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். சம்பவ தினத்தன்று எங்களது ஆறுமாத குழந்தையை எங்களுடன் கூட்டி சென்றோமா என்றால் இல்லை. கண்ணாக்குடியில் உள்ள எனது பெற்றோர்களின் வீட்டில் விட்டு சென்றோம். நான் பிறந்து வளர்ந்த ஊர் கண்ணாக்குடி என்றால் சரிதான். ஜெகநாதன் என்பவரது வீடு கண்ணாக்குடி பாப்பாத்தி அம்மன் கோவில் தெருவில் உள்ள பாலசுப்ரமணியன் வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் பிச்சைராமர் வீட்டிற்கு கிழக்கு திசையில் உள்ள பாலசுப்ரமணியன் என்பவரது வீட்டிற்கு அருகில் தான் பேசிக் கொண்டிருந்தோம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் 2ம் எதிரியின் அக்கா வளர்மதி அங்கு இருந்தார் என்றால் சரிதான். அ.சா.1ன் சேலையை 1ம் எதிரி கிழித்துவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் அந்த சேலையை போலீசாரிடம் கொடுத்தோமா என்றால் இல்லை. போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் 27.09.2024 அன்று காலை 10 மணிக்கு விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். என்னை விசாரணை செய்யும் போது தான் எனது மனைவியையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். 2ம் எதிரி விளக்கமாற்றால் அ.சா.1யை அடித்ததாக சொல்லியுள்ள நிலையில் போலீசார் விசாரணையில் என்ன வகையான விளக்கமாற்றால் அடித்தார் என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவம் நடைபெறும் போது நான் சண்டையை விலக்கிவிட்டேனா என்றால் நான் சண்டையை விலக்கிவிடவில்லை. எதிரிகள் என்னை பயமுறுத்தியதால் நான் சண்டையை விலக்கிவிடவில்லை. சம்பவம் நடந்த பகுதி இருட்டான பகுதி என்றால்

சரியல்ல. சம்பவத்தின் போது எத்தனை பேர் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள். போலீசார் விசாரணையில் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த வீட்டில் உள்ளவர்கள் சம்பவத்தை பார்த்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ சமயத்தில் 1, 2 எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியின் அக்காவிற்கும், எங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். எனது மனைவி, அவரது அக்கா வளர்மதி உடன் சண்டை போட்டதில் தான் எனது மனைவிக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு மறுநாள் போலீசார் என்னை விசாரணை செய்த பிறகு மீண்டும் அழைத்து விசாரணை செய்தார்களா என்றால், 4, 5 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM
Digitally signed by ARUNACHALAM
Date: 2026.02.02 15:21:43 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி